# Parental contribution to the personality development of primary students - ( study based on Puttalam South Divisional Schools)

# ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு – (புத்தளம் தெற்கு கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

R.Thahira[1], A.S.P. Yumna[2],

[1,2]Department of Education and Child care Faculty of Arts and Culture, Eastern University, Srilanka.
rifaideenthahira5@gmail.com

asp.yumna@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் (Abstract of the Study) :** ஆளுமை எனப்படுவது ஒரு குறிப்பிட்ட தனி நபரிடமிருந்து வேறுபடுத்த முடியாததும் விஷேடமானதும் நிலையான நடத்தையும் கொண்ட ஒரு பரந்த அமைப்பாகும். அந்த வகையில் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்வதில் பெற்றோரின் பங்களிப்பைக் கண்டறிந்து அதனை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். அந்த அடிப்படையில் பிள்ளை தாயின் வயிற்றில் பிறந்ததிலிருந்து பாடசாலை செல்லும் வரை பெற்றோரின் வளர்ப்பு முறை அப்பிள்ளையின் ஆளுமையில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இன்றைய நவீன காலகட்டத்தில் பிள்ளைகள் பெற்றோரின் தொழில். குடும்பப் பருமன், பெற்றோரின் வகிபங்கு, குடும்பத்தின் அமைப்பு போன்றன பிள்ளைகளுடைய ஆளுமையை பெரிதும் பாதிக்கின்றன. இது அவர்களுடைய எதிர்கால வாழ்வையும் பாதிப்பதாக இருப்பதால் பிள்ளைகளுடைய வளர்ப்பிலும் ஆளுமை விருத்தியிலும் பெற்றோரின் பங்களிப்பைக் கண்டறிவது காலத்தின் தேவையாக உள்ளது. அந்த வகையில் இவ்வாய்வானது அளவை நிலை ஆய்வாக வடிவமைக்கப்பட்டு புத்தளம் மாவட்டத்தின் தெற்கு கோட்டத்திலுள்ள 21 தமிழ் மொழி மூலப் பாடசாலைகளிலிருந்து 1ஊ மற்றும் வுலிந ஐஐ உள்ளடங்கலான 5 பாடசாலைகள் இலகு எழுமாற்று மற்றும் வசதி மாதிரியெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கல்வி பயிலும் 1148 ஆரம்பப்பிரிவு மாணவரிலிருந்து 1:10 விகிதத்தில் 115 மாணவர்களும், 60 பெற்றோர்களும், 15 ஆசிரியர்களும் இவ் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இங்கு ஆய்வின் சிறப்பு நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் போன்ற முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் ஆசிரியர் மதிப்பீட்டு படிவங்கள், கிராம சேவக அறிக்கைகள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மாதிரிகளிடமிருந்து பெறப்பட்ட அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான தரவுகள் ஆளை௨சழளழகவ நுஒஉநட மென்பொருள் முறைமை மூலம் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு இறுதியாக முடிவுகள் பெறப்பட்டு இவ்வாய்வானது

முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் பெறப்பட்ட முடிவுகளுக்கமைய இன்று பிள்ளைகளுடைய ஆளுமை விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு மிகவும் குறைவாக காணப்படுகிறது. பெற்றோரின் தொழில், பிள்ளைகளோடு அதிக நேரம் செலவழிக்காமை, பிள்ளைகளை விட்டு பிரிந்திருத்தல், பிள்ளைகள் மீது அதிக அன்பு காட்டுதல், சுதந்திரம் வழங்குதல், பிள்ளைகள் மீது அதிக அக்கறை காட்டாமை போன்ற பல்வேறுபட்ட காரணிகள் இங்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளன. எனவே பிள்ளைகளை சிறந்த ஆளுமைவாதிகளாக உருவாக்க பெற்றோர் தமது பிள்ளைகளுடன் அதிக நேரம் செலவழித்தல், பிள்ளைகளுடன் நல்ல முறையில் உறவாடல், அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்தல் ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் சிறந்த அறிவுடையவர்களாக வளர வேண்டும் என்பதை மாத்திரம் விரும்புவது மாத்திரமன்றி அவர்களுடைய தேவைகளையறிந்து அவர்களுடைய ஆளுமையை விருத்தி செய்வது தமது வளர்ப்பிலே தங்கியுள்ளதென்பதை அறிந்து செயற்படுதல் வேண்டும் என்ற விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டன.

**key words**: ஆரம்பப்பிரிவு, ஆளுமை விருத்தி, எரிக்சன், சுய விருத்தி

## ஆய்வு அறிமுகம்

ஆளுமை எனப்படுவது ஒரு குறிப்பிட்ட தனி நபரிடமிருந்து வேறுபடுத்த முடியாததும் விஷேடமானதும் நிலையான நடத்தையும் கொண்ட ஒரு பரந்த அமைப்பாகும். அந்த வகையில் ஆளுமை வளர்ச்சி என்பது எப்போதும் மாறக் கூடியதும் மற்றும் சூழ்நிலைக் காரணிகள் வாழ்க்கையை மாற்றும் அனுபவங்களுக்குட்பட்டது. ஒரு பிள்ளையின் அறிவு, திறன், மனப்பாங்கு, கவர்ச்சி, உளநலம், சூழலுடனான சிறந்த தொடர்பு, நேர்ப்பாங்கான உணர்வு, சிறந்த செயற்பாடுகள் என்பவற்றின் பயனாக இந்த ஆளுமை விருத்தியடைகின்றது. அந்த வகையில் ஆளுமையில் பல்வேறுபட்ட காரணிகள் செல்வாக்கு செலுத்துவதனைக் காணலாம்.

1. பரம்பரைக் காரணிகள்
2. சூழல் காரணிகள் (பெற்றோர், குடும்பம், பாடசாலை சூழல், சமுதாயத் தொடர்பு, சமவயதுக்குழு)

இந்த ஆளுமை விருத்தி என்பது தாயின் கருவறையிலிருந்து ஆரம்பிக்கின்றது. எனினும் ஒரு பிள்ளை தன்னை உணர்ந்து செயற்படும் பருவத்திலே அவ் ஆளுமையில் பாதிப்பு ஏற்படுகின்றது. அந்த அடிப்படையில் பிள்ளை தனது குடும்பத்தில் இருந்து பாடசாலைக்குச் செல்லும் ஆரம்பப் பள்ளி பிள்ளைப் பருவம் மிகவும் சிக்கலான நடத்தைகளைக் கொண்ட பருவமாக காணப்படுகிறது. அந்த அடிப்படையில் ஆரம்பப் பிரிவுக் கல்வி என்ற பதம் குறிப்பது யாதெனில், ஐந்து வயது பூர்தியடைந்த பிள்ளைகள் தரம் 1-5 வரை பாடசாலையில் பெற்றுக் கொள்கின்ற கல்வியாகும். ஒரு குழந்தையின் மனதில் கல்வி பற்றிய கவிவு இப்பருவத்திலேயே இடம்பெறுகின்றது. எனவே தான் **'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'**, **'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'** என்பதற்கிணங்க குழந்தையின் இரண்டு கண்களாக

எண்ணும் எழுத்தும் காணப்படுகின்றது. எனவே இவற்றில் திறனும் ஆற்றலும் விருத்தியுற ஆரம்பக்கல்வி அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது.

அந்த அடிப்படையில் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியில் சூழல் நிலைகளும் உடல், உள வளர்ச்சி ஆரம்பக்கல்வி விருத்தியிலும், ஆளுமையிலும் விருத்தியை ஏற்படுத்துவதனால் அது தொடர்பில் பெற்றோர் கவனம் எடுத்துக் கொள்வதோடு ஆரம்பக்கல்வியை போதிக்கும் நல்லாசிரியர்களிடம் குழந்தையை ஒப்படைப்பது அவசியமாகும்.

இலங்கையின் கல்விக் கொள்கைகளுள் உள்ளடக்கப்பட்டுள்ள 8 தேர்ச்சி நிலைகளில் ஆளுமை தொடர்பான தேர்ச்சிகளை விருத்தி செய்வது முக்கியமானதொன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளது. அதில் ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிவு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினையை விடுவித்தல், நுணுக்கமான பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள் கண்டுபிடித்தலும் கண்டறிதலும் இடம்பெறுகின்றன. இவை யாவும் ஒரு பிள்ளையின் ஆரம்ப அடித்தளமான பெற்றோரிடமிருந்தே கிடைக்கப் பெறுகின்றன. இவற்றைச் சரியாக பெற்றுக் கொடுக்கும் போதே பிள்ளை தனது அடுத்த கட்டத்தை நோக்கி பயணிப்பதற்கான தூண்டுதல் கிடைக்கப் பெறுகின்றது. அவற்றைச் சரியாக பெறாத பட்சத்தில் பல சிக்கலான நடத்தைகளை வெளிக்காட்ட பிள்ளை துணிகிறது.

பிள்ளையின் ஆளுமை விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பை ஆராய்ந்து கண்டறிவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். அந்த அடிப்படையில் பிறக்கும் பிள்ளை தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே பல்வேறு விடயங்களைக் கற்றுக் கொள்கின்றது. எனவே தான் பிள்ளை மற்றும் பெற்றோருக்கிடையிலான தொடர்பு நெருக்கமானதாகக் காணப்பட வேண்டும் எனக் கூறப்படுகிறது. ஒரு பிள்ளை தன் பெற்றோரின் மீது கொண்டுள்ள பற்று (attachment) பிள்ளைகளிடையே சுய விருத்தியை ஏற்படுத்தக் கூடியனவாக உள்ளன. எனவே தான் பதற்றம், பயம் கொண்ட குழந்தை தன் தாயை அணைத்துக் கொள்ளும் போதும், பலமாக பற்றிக் கொள்ளும் போதும் பிள்ளை தாம் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கிறது. அவ்வாறே கவலையுடன் இருக்கும் போதும் தன் தாய் தந்தை தன்னை ஆறுதல்படுத்தி அரவணைக்க வேண்டுமெனவும் விரும்புகிறது.

எனவே தான் சிறப்பான பெற்றோர் வளர்ப்பு முறையுள்ள பிள்ளையொன்று சிறந்த ஆளுமைமிக்கவராக வளர்வதோடு பெற்றோரின் அரவணைப்பு அவர்களுக்கிடையிலான தொடர்பு சுமூகமாக இல்லாத பிள்ளைகள் பல்வேறு உள குறைபாடுகளுக்கு உள்ளாகி துன்புறும் நிலையை இன்று எம் சமூகத்தில் காணக் கூடியதாக உள்ளது. எனவே தான் பெற்றோர்களின் வளர்ப்பு முறை எவ்வாறு காணப்பட வேண்டும் என்பது பற்றி 1983 இல் மக்கோபி, மார்டின் ஆகியோரால் **மாதிரி பெற்றோர்கள்** உருவாக்கப்பட்டனர். அந்த அடிப்படையில் நான்கு விதமான பெற்றோர்கள் இனங்காணப்பட்டு அவர்களுடைய பாணிகள் **பாம்ரிண்ட்** அல்லது **மக்கோபி** மற்றும் **மார்டின்** பெற்றோருக்குரிய பாணிகள் என அழைக்கப்படுகின்றன. இதில் இரண்டு அம்சங்கள் முக்கியமாக கருத்திற் கொள்ளப்படுகிறது.

- **கோரிக்கைகள்** - இது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நடத்தையைக் கட்டுப்படுத்தல் அல்லது அவர்களின் முதிர்ச்சியை வேண்டி நிற்பதைக் குறிக்கின்றது.
- **பொறுப்புணர்வு** - என்பது பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் உணர்ச்சி மற்றும் வளர்ச்சித் தேவைகளை ஏற்றுக்கொள்வதையும் உணர்ந்து கொள்வதையும் குறிக்கின்றது.

அந்த வகையில் பெற்றோர், அறிவுபூர்வமான பெற்றோர்கள், அதிகாரமுள்ள பெற்றோர்கள், ஆதிக்கப் பேர்வழி பெற்றோர்கள், புறக்கணித்து நடக்கும் பெற்றோர்கள் என நான்கு வகையாக வகைப்படுத்தப்படுகின்றனர். இதில் அறிவுபூர்வமான பெற்றோர்களே சிறந்த பெற்றோர்களாக உளவியலாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இன்று பிள்ளையின் ஆளுமை விருத்தியில் பெற்றோரின் செயற்பாடுகள் பாரிய பாதிப்பை உண்டுபண்ணுவதாகக் கண்டறியப்பட்டுள்ளன.

மோகன்கோர் (1987) ஆகிய ஆய்வாளர்களின் கருத்துப்படி பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுடன் செலவிடும் நேரத்தின் பெறுமதியை வீட்டில் முழு நேரமும் பிள்ளைகளுடன் இருக்கும் தாய்மார்களை விட வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பிள்ளைகளே அதிகம் உணர்வதாகக் குறிப்பிடுகின்றனர். இவர்களின் கருத்துப்படி ஒரு பிள்ளை தன் பெற்றோருடன் அதிக நேரம் இருப்பதால் அவர்களுடைய தேவைகள், எண்ணங்கள், எதிர்பார்ப்புக்கள், பிரச்சினைகள் கண்டறியப்பட்டு நிவர்த்தி செய்யப்படுகின்றன. இதனால் உள்ளம் அமைதியடைவதோடு அவர்கள் சிறந்த ஆளுமையுள்ளவர்களாக வளருகின்றனர். அதே வேளை பெற்றோருடன் அதிக நேரம் செலவழிக்க முடியாத பிள்ளைகள் பல்வேறுபட்ட உள ரீதியான அழுத்தங்களுக்கு உள்ளாவதுடன் தான் தனிமைப்படுத்தப்பட்டதாகவும், தனக்கு யாரும் இல்லையெனவும், பாதுகாப்பில்லாதவாறும் உணர்கின்றனர். இதனால் கட்டுப்பாடற்ற அவர்களது வாழ்க்கையில் பொய், களவு, கோபம், வெறுப்பு தோன்றி இது காலப்போக்கில் உக்கிரமடைந்து போதை, மது, பாலியல் துஷ்பிரயோகம், கொலை, கொள்ளை போன்ற சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். எனவே பெற்றோருடைய பராமரிப்பு பிள்ளைகள் ஆளுமைவாதிகளாகவும், சிறந்த நற்பிரஜைகளாகவும் உருவாக்குவதில் பாரிய பங்களிப்பைச் செய்கின்றது.

ரோஸ்காம் மற்றும் பலர் (2017) ஆம் ஆண்டு பிரெஞ்சு பெற்றோர்களிடையே நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் மக்கள் தொகைக் காரணிகள் ( பெற்றோர் மற்றும் குழந்தையின் வயது, முதல் பிறப்பில் பெற்றோரின் வயது, மொத்த குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் வீட்டில் இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை) ஆகியவற்றுக்கிடையிலான உறவை ஆராய்ந்த போது பெற்றோர் மற்றும் குழந்தையின் ஆளுமைப் பண்புகள் மக்கள் தொகைக் காரணிகளுக்கான முடிவுகள் ஆய்வாளரால் கணக்கெடுக்கப்பட்ட இளைய பெற்றோர்கள் பெற்றோரின் சாதனை குறித்து அவர்களால் வெளிக்காட்டப்பட்ட உணர்வு அதிகமாக இருப்பதாகவும் இருப்பினும் அவர்கள் அதிகம் சோர்வடைந்திருப்பதைக் காட்டியதாகவும் காட்டியது. அவ்வாறே குழந்தைகளின் வயதைப் பார்க்கும் போது கூடுதலாக வீட்டில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை பெற்றோருக்கும் குழந்தைக்குமிடையிலான உணர்ச்சி தூரத்தை சற்று அதிகரித்திருந்தது. பெற்றோரின் மனநிலைக் காரணிகளுக்கான முடிவுகள் ஆய்வாளரால்

ஆராயப்பட்ட மூன்று ஆளுமைப் பண்புகளும் அவற்றின் வெவ்வேறு அம்சங்களும் உணர்ச்சிபூர்வமான கட்டுப்பாடு இல்லாமை, நரம்பியல் தன்மைக்கான உந்துவிசைக் கட்டுப்பாடு இல்லாமை, மனசாட்சிக்கு உன்னிப்பாக இருப்பது மற்றும் விடாமுயற்சி மற்றும் ஒத்துழைப்பு நட்பு ஆகியவை இருந்தன. மேலும் பெற்றோரின் கவனக்குறைவு மற்றும் உணர்ச்சி கட்டுப்பாடு இல்லாமை ஆகியவை பெற்றோரின் எரிச்சலை வளர்ப்பதற்கான காரணிகளாக இருந்தன. இதற்கு மாறாக உடன்பாடு மற்றும் விடாமுயற்சி ஆகியவை பாதுகாப்பு காரணிகளாக இருந்தன. எனவே இங்கு பெற்றோரின் ஆளுமை பெற்றோரின் எரிச்சலில் 42.3% மாறுபாட்டை காட்டியதோடு குழந்தையின் ஆளுமை 13.8% ஐ காட்டியது. பெற்றோர் பற்றிய ஆய்வில் பெற்றோர் மற்றும் குழந்தைகள் இருவரின் ஆளுமையையும் கவனத்திற் கொள்வதன் முக்கியத்துவத்தை இவ்வாய்வு முடிவுகள் நிருபிக்கின்றன.

Kubilius என்பவர் மேற்கொண்ட ஆய்வில் பெற்றோர்களின் பிள்ளை வளர்ப்பு முறை குழந்தைகளின் ஆளுமையை பாதிப்பது குறித்து ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அந்த அடிப்படையில் குழந்தைகளின் மரபணு அவர்களின் சொந்த நடத்தைப் பண்புகளைப் பாதிக்கின்றது என்பதற்கு சமமான தெளிவான சான்றுகள் உள்ளன. இரட்டை மற்றும் தத்தெடுப்பு ஆய்வுகள் மரபணு விளைவுகளின் வலிமையை மதிப்பிடுவதற்கான ஒரு சிறந்த அடிப்படையை வழங்குகின்றன. எனவே பிள்ளையின் ஆளுமை விருத்தியில் மரபணு மற்றும் பெற்றோரின் குழந்தை வளர்ப்பு ஆட்சிகள் நெருக்கமாக பின்னிப்பிணைந்திருப்பதைக் காணலாம் எனக் குறிப்பிட்டார். எனவே பிள்ளையின் ஆளுமை விருத்தியில் பெற்றோரின் மரபணு மட்டுமன்றி பிள்ளை வளர்ப்பு முறைகளும் பாரிய பங்களிப்பைச் செய்வதை இதனூடாக அறியலாம்.

ஒரு பிள்ளை குடும்பத்துடன் கொண்டிருக்கும் உறவானது 199 பிள்ளையின் ஆளுமை விருத்தியில் செல்வாக்கு செலுத்துவதாகவும் அது அவர்களுடைய ஆயுட் காலம் முழுவதும் நீடிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் பிள்ளைகள் குடும்பத்துடனேயே தமது அதிக நேரத்தைச் செலவிடுவதால் சில வயதுப் பிரிவுகளில் குடும்பத்தின் செல்வாக்கானது நீண்டதாகவும் உள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் குடும்ப உறுப்பினர்களின் நடத்தைகள் பிள்ளைகள் மீது செல்வாக்குச் செலுத்துவதானால் அவை பிள்ளைகளின் ஆளுமை மற்றும் நடத்தையிலும் செல்வாக்குச் செலுத்துவதாக உள்ளது. அந்த அடிப்படையில் பிள்ளைகளின் நடத்தையில் மாற்றங்கள் சிக்கல்கள் தோன்றும் போது அவை குடும்பத்தினரால் கட்டுப்படுத்தப்படுவதனால் அவர்களுடைய வாழ்க்கை சீரமைக்கப்படுகிறதாகவும் மற்றுமொரு ஆய்வு தெரிவிக்கின்றது.

ஆகவே இன்றைய சூழலில் பெற்றோர் தமது பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் கூடிய கவனம் செலுத்தாமையால் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடுவதால் **“ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு”** என்னும் ஆய்வு அவசியமானதொன்றாகவும் காலத்தின் தேவையாகவும் உள்ளதால் இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.


ISBN 978-624-5736-14-0

**ஆய்வுப் பிரச்சினை**

**"ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு"** என்னும் இவ்வாய்வை மேற்கொள்வதற்கு ஆய்வுப் பிரச்சினை என்பது மிக முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. பிள்ளையினுடைய ஆளுமை பல்வேறு வகையிலும் முக்கியம் பெறுகின்றது. அந்த அடிப்படையில் பிள்ளையினுடைய கற்றல் விருத்தியிலும், மனவெழுச்சி சார் விருத்தியிலும், சமூக விருத்தியிலும் உடல் உளசார் விருத்தியிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதில் பல்வேறுபட்ட விடயங்கள் தாக்கம் செலுத்தக் கூடும். அதில் பெற்றோரின் பங்களிப்பும் ஒன்றாக உள்ளது. எனவே அது தொடர்பாக ஆராய்வது மிக முக்கியமானதொன்றாக உள்ளது.

**ஆய்வுப் பின்னணி**

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிரதேசத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளுடன் செலவழிக்கும் நேரம், அவர்களுக்கிடையிலான உறவு, பிள்ளையிடம் கடுமையாக நடந்து கொள்ளல், முறையற்ற வார்த்தை பிரயோகம், பெற்றோர்களுக்கிடையிலே ஏற்படும் முரண்பாடுகள், பெற்றோரின் வகிபாகம், பிள்ளைகளின் பிறப்பு வரிசை நிலை, குடும்பத்தின் பருமன், குடும்பத்தின் தொழில் அமைப்பு, குடும்பம் அமைந்துள்ள சூழல், பெற்றோர் பிள்ளைகளை விட்டுப் பிரிந்திருத்தல் போன்ற காரணிகளால் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றமை ஆய்வாளனால் அவதானிக்கப்பட்ட ஒரு விடயமாகும். அந்த வகையில் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பைப் பற்றி ஆராய்வதற்கு ஆய்வாளனைத் தூண்டிய காரணிகள் இவையாகும்.

**ஆய்வு நோக்கம்**

1. ஆரம்பப் பிரிவு மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பைக் கண்டறிதல்
2. ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளை இனங்காணல்
3. ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்வதற்கான தீர்வாலோசனைகளையும் பரிந்துரைகளையும் முன்வைத்தல்

**ஆய்வு முறையியலும் வடிவமைப்பும்**

விபரண ஆய்வு முறைகளில் ஒன்றான அளவை நிலை ஆய்வு முறை இவ்வாய்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. தரவுகளை சேகரிப்பதற்காக ஆய்வுக்கருவிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட ஆய்வுக்கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் என்பன அமைந்துள்ளன. இவ்வாய்வில் அளவு மற்றும் பண்பு ரீதியான முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 5 பாடசாலைகளிலிருந்து 1148 ஆரம்பப் பிரிவு மாணவர்களிலிருந்து 10:1 எனும் விகிதத்தில் 115 ஆரம்பப் பிரிவு மாணவர்களும் 15

ஆசிரியர்களும் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வெவ்வேறாகத் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டன. அவ்வாறே 115 மாணவர்களிலிருந்து 2:1 எனும் விகிதத்தில் 60 பெற்றோரிடமிருந்து நேர்காணலின் மூலம் தரவுகள் பெறப்பட்டன. அவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் Microsoft Excel மூலம் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு இவை முப்பரிமாண படங்கள், சலாகை வரைபுகள், அட்டவணையாக்கம் மூலம் காட்டப்பட்டு வியாக்கியானம் செய்யப்பட்டு கலந்துரையாடப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன.

**அட்டவணை 1 மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் விபரம்**

| மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலையின் பெயர் | பாடசாலை வகை | மாணவர் எண்ணிக்கை | ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| புளிச்சாக்குளம் உமர் பாரூக் மகா வித்தியாலயம் | 1C | 45 | 5 |
| தாராக் குடிவில்லு முஸ்லிம் மகா வித்தியாலயம் | 1C | 19 | 3 |
| உடப்பு தமிழ் மகா வித்தியாலயம் | 1C | 28 | 3 |
| கொத்தாந்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயம் | 1C | 15 | 2 |
| முந்தல் தமிழ் மகா வித்தியாலயம் | Type II | 8 | 2 |
| மொத்த எண்ணிக்கை | | 115 | 15 |

**மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.**

**இலக்கிய மீளாய்வு (டவைநசயவரசந சநஎநைற)**

**பிள்ளையின் ஆளுமை விருத்தி தொடர்பான கொள்ளைகள்**

குழந்தை விருத்தி பற்றிய கோட்பாடுகள் வெவ்வேறு உளவியலாளர்களால் ஆய்வுகளின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் **சிக்மண்ட் பிறைட் (Sigmund Freud 1856-1939), ஜீன் பியாஜே (Jean Piaget 1896-1980), எரிக் எரிக்சன் (Erik Erikson 1902-1994)** போன்றோரின் கருத்துக்கள் மிக முக்கியமானவைகளாகும். பிள்ளையின் ஆளுமை விருத்திக்கு அவர்களின் பிள்ளைப்பருவ அனுபவங்கள் மிக முக்கிய காரணங்களாக அமைகின்றன. அந்த வகையில் **பிரய்ட், எரிக்சன்** போன்ற உளப்பகுப்பாய்வுக் கொள்ளையாளர்கள் **றொஜெஸ்** என்ற சுய சிந்தனைக் கொள்கையாளர்கள் இது தொடர்பில் பல்வேறுபட்ட கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

அன்று தொட்டு இன்று வரை பிள்ளையின் விருத்தி தொடர்பில் பல்வேறுபட்ட ஆய்வுகளும் பரிசோதனைகளும் நடத்தப்படுவதோடு அது தொடர்பிலான கொள்கைகளும் முன்வைக்கப்பட்ட வண்ணமேயுள்ளன. அந்த அடிப்படையில் **வியன்னாவைச் சேர்ந்த வைத்தியரான சிக்மன்ட் பிரைய்ட் என்ற உளவியலாளர் (1856-1939)** தனது கண்டுபிடிப்புக்களை வைத்து மனித நடத்தையையும் பிள்ளை வளர்ச்சியையும் விளக்குவதற்கு விரிவான கொள்கையொன்றை விருத்தி செய்து அதை **உளப்பகுப்பாய்வுக் கொள்ளை** என அறிமுகப்படுத்தினார். அதில் பிள்ளை பற்றிய ஆய்வில் பிள்ளைப்பருவ அனுபவங்கள் அதன் பின்னைய விருத்தியிலும் செல்வாக்குச் செலுத்துவதாகக் கண்டறிந்தார். அத்துடன் மனம், ஊக்கல், ஆளுமை தொடர்பிலான விஞ்ஞான ஆய்வுகளையும் மேற்கொண்டார்.

நடத்தையில் அதிதீவிரவாதியான **ஜே.பி வாட்சன்** என்பவர் **1930 இல் அல்பேட்** என்ற சிறுவனை விலங்குகளுடன் நிபந்தனைப்படுத்தும் ஆராய்ச்சியை அமெரிக்காவில் மேற்கொண்டார். அதில் அல்பேட்டை அவனது செல்லப்பிராணியான முயலுக்குப் பயப்படச் செய்வதாகும். இதனடிப்படையில் இவர் பிள்ளைகளை நிபந்தனைப்படுத்தவும், நிபந்தனைப்படுத்தலிலிருந்து விடுவிக்கவும் முடியுமென பெற்றோருக்கான அறிவுரையில் எடுத்துக் கூறியுள்ளார். மேலும் பெற்றோர் தாம் விரும்பிய நடத்தைகளை பிள்ளைகளிடத்து ஏற்படுத்த வேண்டுமெனின் பிள்ளைகளின் கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதை தெளிவுபடுத்தினார்.

மேலும் **பிள்ளையொன்றின் மனம் பிறப்பில் ஏதும் எழுதப்படாத மற்றும் அனுபவங்களால் எழுதப்படக் காத்திருக்கும் கரும்பலகை எனவும் ஆரோக்கியமான குழந்தைகள் 10 பேரை என்னிடம் ஒப்படையுங்கள் நான் அவர்களை தெரிந்தெடுத்து பயிற்றுவித்து நான் நினைக்கும் ஒரு நிபுணனாக உருவாக்க என்னால் முடியும்** எனக் கூறினார். எனவே பிள்ளையின் ஆளுமை விருத்தியில் பெற்றோர் முக்கிய பங்கை வகிக்கின்றனர் என்பதை நாம் இதனூடாக அறியலாம்.

**பியாஜே** பிள்ளை விருத்தி பற்றி விளக்கும் போது கற்றலில் அல்லது மாற்றியமைக்கப்படக் கூடிய செயற்பாட்டை வலியுறுத்தியதுடன் பிள்ளை வளர்ச்சியில் உயிரியல் காரணிகளின் முக்கியத்துவத்தை வெளியிட்டார். இவ்வாறே அறிவுசார் விருத்தியையும் ஒழுக்க விருத்தியையும் விளக்கி அறிவுசார் விருத்திக் கொள்ளையை வெளியிட்டார். இதன்படி அறிவுசார் நடத்தையானது பிள்ளையின் முதிர்ச்சி, அனுபவம், பிள்ளைகளின் அனுபவத்தின் இயல்பினைப் பாதிக்கின்ற வளர்ப்பு முறை, வளரும் போது பெற்றுக் கொள்கின்ற கல்வி போன்ற அம்சங்களின் விளைவாக ஏற்படுகிறது. இவர் பிள்ளைப் பருவத்தை 4 கட்டங்களாக வகைப்படுத்தி விளக்கியுள்ளார்.

1. புலனியக்கப் பருவம் (Sensorimotor Stage) பிறப்பு முதல் 2 வயது வரையான பருவம்

2. தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவம் (Pre – operational stage) 2 வயது முதல் 7 வயது வரையான பருவம்

3. தூல சிந்தனைப் பருவம் (Concrete operational Stage) 7 வயது முதல் 11 வயது வரையான பருவம்

4. நியம சிந்தனைப் பருவம் (Formal operational Stage) 11 வயது முதல் கட்டிளமைப்பருவம் வரை

இவ்வொவ்வொரு கட்டத்திற்கும் அமைய வெவ்வேறுபட்ட செயற்பாடுகள் வரையறை செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவம் (Pre – operational stage), தூல சிந்தனைப் பருவம் (Concrete operational Stage) ஆகிய இரு பிரிவுகளில் உள்ளடக்கப்படுகின்றனர் (அருள்மொழி, 2006).

Kubilius என்னும் ஆய்வாளர் The Role of the family in talent development எனும் ஆய்வில் குடும்பம் வளரும் குழந்தை மீது மிகவும் சக்தி வாய்ந்த விளைவுகளை ஏற்படுத்துகின்றது. அணுகுமுறைகள், நம்பிக்கைகள், வாய்ப்புக்கள், பழக்கவழக்கங்கள், மற்றும் ஆளுமைப் பண்புகளைப் பாதிப்பதாகவும் ஒரு குழந்தை தான் யார்? அல்லது அவள் என்ன செய்கிறாள்? என்பதைத் தீர்மானிப்பதில் குடும்பம் முக்கிய பங்கு வகிக்கின்றதாகவும் திறமை உள்ள ஒரு குழந்தையைப் பொருத்த வரை அவளுடைய திறனை உயர் மட்டத்திற்குக் கொண்டு செல்வதில் பெற்றோர் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்பதைக் கண்டறிந்தார்.

Albrat Atlar (1994) என்பவரின் ஆய்வின் முடிவின் படி பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியை அவர்கள் எவ்வாறு வளர்க்கிறார்கள் மற்றும் பயிற்றுவிக்கிறார்கள் என்பதைப் பொறுத்து செல்வாக்குச் செலுத்துகிறார்கள் எனவும் சிறு வயதிலே தாயின் பங்கு முக்கியம் என்றாலும் தாய் தந்தை இருவரும் தங்கள் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியை சமமாகப் பாதிப்பதாக இவர் வாதிட்டார். மேலும் குழந்தைகளை ஆடம்பரப்படுத்துவதன் ஆபத்தை வலியுறுத்தியதோடு இது அவர்களின் சிக்கலான நடத்தைக்கு மிக முக்கிய காரணியாக அவர் கண்டார். எனினும் தண்டனை சர்வதிகாரம் மற்றும் பெற்றோர்களால் புறக்கணிக்கப்படுவதை எதிர்த்தார். மேலும் குழந்தைகளின் ஆளுமை விருத்திக்குச் சரியான அளவு மென்மை தேவை என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

Tucker Et Al (1997) என்பவர் தன் ஆய்வில் விவாகரத்து என்பது சமூகங்களில் பொதுவாகி விட்டதால் இது பிள்ளைகளுடைய ஆளுமை விருத்தியில் பாதிப்பை ஏற்படுவது பற்றி 1991 ஆம் ஆண்டில் Amedo And Geeth ஆகியோர் 92 ஆய்வுகளை மேற்கொண்டனர். மேலும் 1990 களில் மேற்கொள்ளப்பட்ட பிற ஆய்வுகளிலும் இதில் பெற்றோர் ஒருவருக்கொருவர் திருமணம் செய்து கொண்ட குழந்தைகளுடன் பெற்றோர் விவாகரத்து செய்த குழந்தைகள் பற்றி ஆய்வு செயயப்பட்டதன் அடிப்படையில் அவை பிள்ளையின் சுய விருத்தி, சுய எண்ணக்கரு, கல்வியில் சாதனை, நடத்தை சிக்கல்கள், தகவமைப்பு, நீண்ட கால ஆரோக்கியம் என்பவற்றில் பாதிப்பை ஏற்படுவதைக் கண்டறிந்தனர்.

ரோஸ்காம் (2017) பெற்றோர் எரித்தல் என்பது பெற்றோருடன் தொடர்புடைய ஒரு நோய்க்குறி ஆகும். இது மூன்று பரிமாணங்களால் வகைப்படுத்தப்படுகிறது. உணர்ச்சி மற்றும் உடல் சோர்வு போன்றவை பெற்றோரை தங்கள் குழந்தைகளிடமிருந்து உணர்ச்சி ரீதியாக

விலக்குதல், பெற்றோரின் சாதனை இழப்பு ஆகிய காரணங்களால் பெற்றோர் தமது பிள்ளைகளுடன் எரிச்சல்படுவதாகவும், பெற்றோரின் எரிச்சலில் உள்ள தனிப்பட்ட வேறுபாடுகளை பல காரணிகள் மூலம் விளக்கலாம் எனவும் இவர் தன் ஆய்வில் கண்டறிந்தார்.


**தரவுகளின் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

இவ்வாய்வானது பொது நோக்கத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கங்களினடிப்படையில் உருவாக்கப்பட்ட ஆய்வு வினாக்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்கொத்து, நேர்காணல், மற்றும் அவதானம் போன்ற ஆய்வுக் கருவிகளின் துணையுடன் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பெறப்பட்ட தரவுகள் புள்ளிவிபரவியல் அடிப்படையிலும் பண்பு ரீதியிலும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு பெறப்பட்ட தரவுகள் Microsoft Exel முறையைப் பயன்படுத்தி சலாகை வரைபுகள், வரைபுகள், முப்பரிமாண வரைபடம் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பைக் கண்டறிதல்**

Albrat Atlar ( 1994 ) என்பவரின் இன் ஆய்வின் முடிவின் படி பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியை அவர்கள் எவ்வாறு வளர்க்கிறார்கள் மற்றும் பயிற்றுவிக்கிறார்கள் என்பதைப் பொறுத்து செல்வாக்கு செலுத்துகிறார்கள். சிறு வயதிலே தாயின் பங்கு முக்கியம் என்றாலும் தாய் தந்தை இருவரும் தங்கள் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியை சமமாக பாதிப்பதாக இவர் வாதிட்டார். மேலும் குழந்தைகளை ஆடம்பரப்படுத்துவதன் ஆபத்தை வலியுறுத்தியதோடு இது அவர்களின் சிக்கலான நடத்தைக்கு மிக முக்கிய காரணியாக அவர் கண்டார். எனினும் தண்டனை சர்வதிகாரம் மற்றும் பெற்றோர்களால் புறக்கணிக்கப்பட்டதை எதிர்த்தார். மேலும் குழந்தைகளின் ஆளுமை விருத்திக்கு சரியான அளவு மென்மை தேவை என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

அதனடிப்படையில் பெற்றோர் தமது பிள்ளைகளுடன் பழகும் விதம் மற்றும் வளர்ப்பு தொடர்பில் கண்டறியும்முகமாக பெற்றோரிடம் வினவப்பட்ட வினாவிற்கு அவர்களால் வழங்கப்பட்ட பதில்கள் பின்வரும் வரைபினூடாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.





***வரைபடம் 1 பெற்றோரின் பிள்ளையுடன் பழகும் விதம்***


ISBN 978-624-5736-14-0

இங்கு 46 சதவீமான பெற்றோர்கள் தாம் பிள்ளைகளை மிகவும் அன்பாக வளர்ப்பதாகவும். 23 சதவீதமான பெற்றோர் தமது பிள்ளைகளை மிகவும் சுதந்திரமானவர்களாக வளர்ப்பதாகவும் பதிலளித்திருந்தனர். மிகக் குறைந்த அளவிலான பெற்றோரே குறிப்பாக 11 சதவீதமான பெற்றோரே தமது பிள்ளைகளை அறிவுபூர்வமாக வளர்ப்பதாக பதிலளித்திருந்தனர். அவ்வாறே பெற்றோர் உம்முடன் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள்? என மாணவர்களிடம் வினவிய போது 42 சதவீதமானோர் தமது பெற்றோர் தாம் மீது மிகவும் அன்பாக நடந்து கொள்வதாகவும், 20 சதவீதமானோர் தமது பெற்றோர் தம் மீது அன்பாகவும், கண்டிப்புடனும் நடந்து கொள்வதாகவும் தெரிவித்தனர். அதே வேளை 20 சதவீதமானோர் கடுமையாக நடந்து கொள்வதாகவும் 8 சதவீதமானோர் தாம் என்ன செய்தாலும் பெற்றோர் அடிப்பதில்லை திட்டுவதில்லை என பதிலளித்தனர்.

**பெற்றோர் தமது பிள்ளைகளுடன் செலவழிக்கும் நேரம் தொடர்பில் கண்டறிதல்**

பெற்றோரிடம் நீர் உமது பிள்ளைகளுடன் போதிய நேரம் செலவிடுகின்றீர்களா? என வினவப்பட்ட வினாவிற்கு அவர்களில் 100 சதவீதத்திற்கு 24 சதவீதமான பெற்றோரே ஆம் எனவும் 76 சதவீதமான பெற்றோர் இல்லை எனவும் பதிலளித்தனர். இதே வினாவை மாணவர்களிடம் வினவிய போது 36 சதவீதமானோர் ஆம் எனவும் 64 சதவீதமான மாணவர்கள் இல்லை எனவும் பதிலளித்தனர். பெற்றோரிடம் அதற்கான காரணம் பற்றி வினவப்பட்ட போது அவர்களால் வழங்கப்பட்ட பதில்கள் பின்வருமாறு அமைந்திருந்தது. அதில் தாம் தமது பிள்ளைகளுடன் போதிய நேரம் இருக்க முடியாததற்கான காரணங்களில் முதன்மையானதாக தொழிலையே முன்வைத்தனர். அவர்களால் முன்னெடுக்கப்படும் தொழில்களை பின்வரும் வரைபடம் எடுத்துக்காட்டுவதாயுள்ளது.





***வரைபடம் 2 பெற்றோர் பிள்ளைகளுடன் போதிய நேரம் செலவிட முடியாமைக்கான காரணங்கள்***

இங்கு 74 சதவீதமான பெற்றோர்கள் கூலி வேலை செய்பவர்களாகவே காணப்படுகின்றனர். அதே வேளை 15 சதவீதமானோர் வியாபாரம் செய்கிறவர்களாகவும் 8 சதவீதமானோர் விவசாயம் செய்பவர்களாகவும் 2 சதவீதமானோர் மீன் பிடித் தொழில் ஈடுபடுபவர்களாகவும் அரச சேவையில் ஈடுபடுவோர் 1 சதவீதமாகவும் காணப்படுகின்றனர்.

**ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளை இனங்காணல்**

**பெற்றோர் பிள்ளைகளைப் பிரிந்திருப்பது தொடர்பில் கண்டறிதல்**

Albrat மேற்கொண்ட ஆய்வில் விவாகரத்துச் செய்யப்பட்ட குடும்பங்களில் குழந்தைகளின் ஆளுமை மற்றும் நடத்தையில் பாரிய தாக்கம் ஏற்படுவதாகவும் அவர்களுடைய பாதுகாப்பு பாதிப்பதாகவும் கண்டறிந்தார். இதற்கமைய பிள்ளைகளை விட்டு பெற்றோர் பிரிந்திருப்பது தொடர்பில் கண்டறியுமுகமாக பெற்றோரிடம் இது தொடர்பில் வினவிய போது அதில் பெற்றோர் பலவிதமான பதில்களை வழங்கியிருந்தனர். இதனை பின்வரும் வரைபடம் எடுத்துக் காட்டுகிறது.




***வரைபடம் 3 பெற்றோர் பிள்ளைகளை விட்டு பிரிந்திருப்பதற்கான காரணங்கள்***

மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி 60 பெற்றோரில் 26 பெறறோர் பிள்ளைகளுடன் இருக்கும் அதே வேளை பிள்ளைகளை விட்டு பிரிந்திருக்கும் பெற்றோர் 34 ஆக காணப்படுகின்றனர். அந்த அடிப்படையில் இங்கு 100ற்கு 67 சதவீதமான பெற்றோர் தொழில் நிமித்தம் வெளிநாட்டில் இருப்பதால் தமது பிள்ளைகளை விட்டுப் பிரிந்திருக்கின்றனர். அதேவேளை 17 சதவீதமான பிள்ளைகள் பெற்றோரின் இறப்பு காரணமாக பிரிந்திருப்பதாகவும், 11 சதவீதமானோர் தாய் தந்தையர் விவாகரத்து செய்ததன் காரணத்தினால் பிரிந்திருப்பதாவும், 5 சதவீதமானோர் மறுமணம் செய்திருப்பதன் காரணத்தினால் பிரிந்திருப்பதாகவும் பதிலளித்தனர்.

**முடிவுகளும் கலந்துரையாடலும்**

**ஆரம்பப் பிரிவு மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பைக் கண்டறிதல்**

இங்கு 46 சதவீதமான பெற்றோர் தமது பிள்ளைகளுடன் மிக அன்பாக நடந்து கொள்வதாக பதிலளித்தனர். அதே வேளை பெற்றோர் அதிகாரமாக நடந்து கொள்வதாக பதிலளித்தனர். அறிவுபூர்வமாக நடந்து கொள்வதாக வீதமானோரே பதிலளித்தனர். அறிவுபூர்வமான பெற்றோர் என்போர் பிள்ளைகள் கூறுவதைக் கேட்டு அதை ஆலோசித்து முடிவு எடுப்பவர்களாவர். இவர்களின் ஒழுக்காற்று முறைகள் கடுமையானவையாக இருப்பினும் தமது பிள்ளைகளை சுயமாகவும், சுயாதீனமாகவும் செயற்பட ஊக்குவிப்பதோடு, இருவழி தொடர்பாடலையும் அனுமதிக்கிறார்கள். பாம்ரிண்ட் ஆராய்ச்சியின் அடிப்படையில் இவர்களின் பிள்ளைகள் பொறுப்புள்ள பிள்ளைகளாகவும், சுயாதீனமாகவும், அதிக செயலாற்றலுடனும், கல்வியில் சாதிப்பதோடு சுயமரியாதையையும் வளர்த்துக் கொள்வார்கள். திறமையான சமூக


ISBN 978-624-5736-14-0

உணர்வுகளைப் பெற்று நண்பர்களுடன் பழகவும் சிறந்த மன ஆரோக்கியத்தைக் கொண்டிருப்பதோடு குறைந்தளவு மனச்சோர்வு, பதட்டம் கவலையைக் கொண்டவர்களாக இருப்பர்.

அதே வேளை அதிகாரபூர்வமான வளர்ப்பு முறையில் பிள்ளைகளை கட்டுப்படுத்துவதோடு இங்கு பெற்றோர் பிள்ளைகளிடம் வன் சொற்களைப் பிரயோகிப்பதோடு தண்டனை முறையையும் கையாளுகின்றனர். இதனால் பிள்ளைகள் மகிழ்ச்சியற்ற மன நிலையைக் கொண்டிருப்பதோடு சுதந்திரமாகவும் செயற்பட மறுக்கின்றனர். மேலும் அதிக நடத்தை சார் பிரச்சினைகளை வெளிகாட்டுவதோடு அதிக அச்ச சுபாவமுடையவர்களாகவும் முரட்டுத் தன்மையுடையவர்களாகவும் காணப்படுகின்றனர். பெற்றோர் தமது பிள்ளை என்ன செய்தாலும் அதை பொருட்படுத்துவதில்லை அவ்வாறே புறக்கணிக்கும் பெற்றோரும் தம் பிள்ளைகளின் செயற்பாட்டில் எவ்வித கரிசனையும் காட்டாதவர்களாக இருப்பதால் பிள்ளைகள் தாம் விரும்பியவாறு செயற்படுகின்றனர். இதனால் சரி எது? பிழை எது? என்பதை விளங்கிக் கொள்ளாமல் எவ்விதக் கட்டுப்பாடுகளும் இல்லாததால் அவர்கள் பல தவறுகளைச் செய்கிறவர்களாக வளர்கிறார்கள். இது பிள்ளைகளுடைய ஆளுமையை மிகவும் பாதிப்பதாக உள்ளது. இதில் பொய், படிப்பில் பொடுபோக்கு, விளையாட்டு களவு குறிப்பிடத்தக்க விடயங்களாக உள்ளன. எனவே தான் பிள்ளைகள் வளர்ப்பில் சிறந்த முறையாக அறிவுபூர்வமான வளர்ப்பு முறை உள்ளதாக உளவியலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளும் தெரிவிக்கின்றன.

**பெற்றோர் தமது பிள்ளைகளுடன் செலவழிக்கும் நேரம் தொடர்பில் கண்டறிதல்**

மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அதிகமான பெற்றோர் தமது பிள்ளைகளுடன் நேரம் செலவழிக்காமைக்கான காரணமாக தொழிலையே காரணம் காட்டியுள்ளனர். அந்த அடிப்படையில் அதில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிரதேசத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்களில் அதிகமானோரின் பெற்றோர் சாதாரண கூலி வேலை செய்பவர்களாகவே காணப்படுகின்றனர். கூலி வேலை செய்வோர் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை வேலை செய்பவர்களாகக் காணப்படுவதால் அவர்களால் தம் பிள்ளையுடன் போதிய நேரத்தைச் செலவழிக்க முடிவதில்லை இருப்பினும் பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகக் குறிப்பிட்டிருந்தனர்.

இதனால் அவர்களால் தம் பிள்ளைகளுடன் நேரம் செலவிட முடியாததைப் போலவே நாள் வறுமானம் சராசரியாக 1500 - 2000 அளவில் அல்லது அதை விடக் குறைந்த அளவிலே காணப்படுகிறது. இதனால் அவர்களால் வீட்டுத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மாத்திரமே வறுமானம் போதியதாக இருப்பதால் பிள்ளைகளின் பாரிய விருப்பங்களை நிறைவேற்ற முடியாமல் அல்லது கால தாமதம் ஏற்படுவதாகக் குறிப்பிட்டனர். இதனால் பிள்ளைகளுடைய ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் பூரணமாக நிறைவேற்றப்படுவதில்லை என்பதால் பிள்ளைகள் கவலையடைவதோடு பெற்றோரிடம் சண்டையிடல், அழுதல் போன்ற நடத்தைகளை வெளிக்காட்டுவதோடு மன அழுத்தங்களுக்கும் உட்படுகின்றனர். எனவே வகுப்பறையில் ஏனைய பிள்ளைகளின் பொருட்களை எடுத்தல், பொய் சொல்லுதல், சண்டையிடுதல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுவதைக் கண்டறிய முடிந்தது.


ISBN 978-624-5736-14-0

மேலும் தந்தை வியாபார வேலைக்குச் சென்றிருப்பதால் தாயின் பராமரிப்பின் கீழ் உள்ள பிள்ளைகள் தாயின் சொல் கேட்பதில்லையெனவும் தம்மால் பிள்ளைகளை கட்டுப்படுத்த முடிவதில்லையெனவும் தெரிவித்த அதே வேளை பிள்ளைகள் நண்பர்களோடு இணைந்து மீன் பிடிக்க கடலுக்கும், குளத்திற்குச் செல்வதாகவும் தெரிவித்தனர்.

அரச சேவையில் ஈடுபடும் பெற்றோரின் பிள்ளைகள் மேற்படி தவறுகளை செய்யாதிருப்பினும் தாயின் தந்தையின் அன்பைப் பெறாதவர்களாகவும் பாட்டியின் கண்காணிப்பில் வளர்பவர்களாக காணப்படுவதால் முழுமையாக பெற்றோரின் அன்பைப் பெறாதவர்களாக உள்ளனர். இது தொடர்பில் பெற்றோரிடம் வினவிய போது காலையில் 7.00 ற்கு சென்று மாலையில் 2.30 அல்லது 5 மணிக்கு வீடு திரும்புவதால் தமக்கு நேரம் கிடைப்பதில்லையெனவும் அன்றைய வேலைத்தள வேலைகள் இரவிலும் தொடர்தல் காரணமாக பிள்ளைகளுடன் போதிய நேரம் செலவழிக்க முடிவதில்லையென பதிலளித்தனர்.

மேற்படி எனது ஆய்வின் முடிவை இவ்வாய்வு வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது. Anna, Bethdoyle Marline and Moretti (2004) என்பவர்களால் Parents-child Relationship and Adjestment in Adolescene எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பிள்ளைகளுடன் நெருங்கிய தொடர்பு பேணும் போது அவர்கள் தங்கள் பெற்றோர்களை எதிர்க்க மாட்டார்கள். இந்நெருங்கிய தொடர்பானது பெற்றோர்கள் எப்போதும் தங்களை கவனிக்கிறார்கள் என்ற எண்ணத்தை உருவாக்கும். எனவே பிள்ளைகள் வளரும் போது தேவையற்ற மனிதர்களிடம் தொடர்பு வைப்பதனைக் குறைப்பார்கள். அத்துடன் கற்றலில் அதிக கவனமும் செலுத்துவார்கள் என்பதாகக் கண்டறிந்தார்.

**ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளை இனங்காணல்**

இன்றைய சூழலில் மனிதர்களின் தேவைகள் அதிகரித்துள்ள காரணத்தினால் தாய் தந்தை இருவருமே தொழில் செய்யும் கட்டாயம் ஏற்பட்டுள்ள நிலையில் அதிகமான பெற்றோர் பிள்ளைகளை விட்டுப் பிரிந்திருக்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. அந்த அடிப்படையில் இது பிள்ளைகளின் ஆளுமையையும் பாதிப்பதாக உள்ளது. மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கமைய 67 சதவீதமான பெற்றோர் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றிருப்பதால் தமது பிள்ளைகளளை விட்டுப் பிரிந்திருக்கின்றனர். அதில் வெளிநாட்டில் உள்ள 22 பெற்றோரில் 8 பெற்றோர் இருவருமே வெளிநாட்டில் இருப்பதை அறிய முடிந்தது. அதிலும் குறிப்பாக 3 பிள்ளைகளின் தாய் மாத்திரம் வெளிநாட்டிலிருப்பதாகவும் அறிய முடிந்தது.

ஒரு பிள்ளையின் ஆளுமை விருத்தியில் பெற்றோர் மிக முக்கியமானவர்கள் என்பதை மறந்து அவர்கள் இருவருமே தமது பிள்ளைகளை உறவினர்களிடம் முக்கியமாக தாத்தா, பாட்டியிடம் விட்டுச் செல்கின்றனர். இதனால் அப்பிள்ளை தாய் தந்தையினால் பெறும் பாசத்தை முற்றாக இழந்துள்ளதோடு தாத்தா பாட்டிக்கு வீட்டு வேலைகளில் உதவியாக இருக்கும் நிலை ஏற்படுவதை ஆய்வின் போது அறிய முடிந்தது.

அதிகமான பிள்ளைகள் பெற்றோரில் ஒருவரை குறிப்பாக தந்தையை பிரிந்து வாழ்வதுடன் தந்தையின் பாசத்திற்காக ஏங்குகின்றனர். அதிகமான தந்தைமார் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமையால் தம் மனைவி பிள்ளைகளைப் பிரிந்துள்ளனர். இதனால் மனைவி உட்பட பிள்ளைகளும் உள ரீதியாக பாதிப்படைவதுடன் உடல் ரீதியான தேவைகளை தவறான பாதையில் சென்று நிறைவேற்றிக் கொள்கின்றனர். தந்தை பிள்ளைகளைப் பார்ப்பதற்கு வருடத்திற்கொரு தரம் பார்வையிட்டுச் செல்வதையும் ஆய்வின் போது கண்டறிய முடிந்தது.

மேலும் 17 சதவீதமான பிள்ளைகள் இறப்பு காரணமாக பெற்றோரை பிரிந்திருப்பதோடு அவர்களும் தாயின் அல்லது தந்தையின் பராமரிப்பில் வளருவதாக அறிய முடிந்தது. இவர்களும் தாய் தந்தை பாசத்தை இழந்துள்ளமையால் கவலை, விரக்தி, சோர்வு, கற்றலில் நாட்டமின்மை போன்ற சுபாவங்களைக் கொண்டிருப்பதாக அறிய முடிந்தது.

விவாகரத்துக் காரணமாக 11 சதவீதமான பிள்ளைகள் பெற்றோரில் ஒருவரைப் பிரிந்துள்ள நிலையில் அவர்கள் தாய் தந்தையின் பாசத்தை இழந்துள்ளனர். மேலும் கவலை விரக்தி ஏனையவர்களின் பரிதாபப் பார்வைக்கு உள்ளாதல் ஏனைய மாணவர்களின் கேலிக்கைகளுக்கும் கேள்விகளுக்கும் முகங்கொடுக்க நேரிடல், பெற்றோரின் சண்டை, தகாத வார்த்தைப் பிரயோகம் போன்றவற்றால் அச்சமடைதல், வெறுப்படைதல், அழுதல் போன்ற நடத்தை சார்ந்த பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாகக் குறிப்பிட்டனர். அவ்வாறே மறுமணம் செய்வதாலும் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை மாணவர்கள் எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டனர்.

மேற்படி எனது ஆய்வின் முடிவினை Albrat Atlar இனால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவு நிருபிப்பதாக உள்ளது. அதாவது பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியை அவர்கள் எவ்வாறு வளர்க்கிறார்கள் மற்றும் பயிற்றுவிக்கிறார்கள் என்பதைப் பொறுத்து செல்வாக்கு செலுத்துகிறார்கள். சிறு வயதிலே தாயின் பங்கு முக்கியம் என்றாலும் தாய் தந்தை இருவரும் தங்கள் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியை சமமாக பாதிப்பதாக இவர் வாதிட்டார். மேலும் குழந்தைகளை ஆடம்பரப்படுத்துவதன் ஆபத்தை வலியுறுத்தியதோடு இது அவர்களின் சிக்கலான நடத்தைக்கு மிக முக்கிய காரணியாக அவர் கண்டார். எனினும் தண்டனை சர்வதிகாரம் மற்றும் பெற்றோர்களால் புறக்கணிக்கப்பட்டதை எதிர்த்தார். மேலும் குழந்தைகளின் ஆளுமை விருத்திக்கு சரியான அளவு மென்மை தேவை என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

**பரிந்துரைகள்**

- பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு அதிக பிரியம் காட்டுவதால் அவர்கள் தம்மை சிறு பிள்ளைகளாகவே கருதிச் செயற்படுவர். எனவே அவர்களுடன் மிகவும் அன்பு காட்டுவது அவர்களுடைய தவறுகளை மன்னிக்கும் மனப்பாங்கை வளர்ப்பதால் மேலும் தவறுகளைச் செய்வர். எனவே அதிக அன்பு காட்டுவதை தவிர்த்து சமநிலையைப் பேணுதல் வேண்டும். இதன் போது பிள்ளைகள் சரி எது பிழை எது என்பதை விளங்கிச் செயற்படுவர்.

- பிள்ளைகளுக்கு அதிக கண்டிப்பு மற்றும் தண்டனையும் வழங்குவது கூடாது. இதனால் பிள்ளைகள் அதிக மன அழுத்தங்களுக்கு உள்ளாவதுடன் அவர்கள் கவலை, சோர்வு, முரட்டுத்தனம் போன்ற மனவெழுச்சிகளை வெளிக்காட்டுவது அவர்களுடைய ஆளுமையை பாதிக்கும். எனவே பெற்றோர் கண்டிப்புடன் கூடிய அன்பை வெளிக்காட்டுதல் வேண்டும்.
- அவ்வாறே பிள்ளைகளுக்கு அதிக சுதந்திரம் மற்றும் அவர்களை புறக்கணிப்பதும் அவர்களை கட்டுப்பாடு இல்லாது செயற்படத் தூண்டுவதோடு அவர்களுடைய ஆளுமையையும் பாதிக்கும்.
- பெற்றோர் தமது வேலைப்பளுவுக்கு மத்தியிலும் பிள்ளைகளுக்காக குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி அவர்களுடன் அன்பாக உறையாடுதல் வேண்டும். இதனால் அவர்கள் தமது பிரச்சினைகளையும், தேவைகளையும், விருப்புக்களையும் கூறும் வாய்ப்பு ஏற்படுவதால் அவர்களுடைய மனது அமைதியடையும்.
- பெற்றோர் பிள்ளைகளுடைய விருப்பங்களை நிறைவேற்ற போதிய வருமானம் இல்லாவிட்டாலும் அது தொடர்பில் பிள்ளைகளுக்கு புரிய வைத்து பிறகு வாங்கித் தருவதாக நம்பிக்கையூட்ட வேண்டும். பிள்ளைகளுக்கு நம்பிக்கை கொடுக்குமிடத்து அதை கட்டாயம் நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும். அவ்வாறு செய்யும் போது பிள்ளைகள் சந்தர்ப்பங்களை புரிந்து கொண்டு செயற்படுவதோடு பெற்றோரின் சிரமங்களை அறிந்து செயற்படுவர். இதன் போது அவர்களுக்கு பெற்றோர் மீது கோபம், நம்பிக்கையின்மை ஏற்படுவது தவர்க்கப்பட்டு ஆளுமை விருத்தி செய்யப்படும்.
- எனவே பெற்றோர் தமது வகிபங்கில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் பிள்ளைகள் தொடர்பில் கண்காணிப்பாகவும் இருக்க வேண்டும். பிள்ளைகளிடம் அவர்களது ஆசைகளை நிறைவேற்ற முடியாது போனாலும் அது பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறி அவர்களது மனப்பாங்கை சரி செய்தல் வேண்டும். இது அவர்களுடைய ஆளுமையை மேலும் அதிகரிப்பதாக அமையும்.
- பிள்ளையின் வளர்ப்பில் தாயின் பங்கு அதிகமாக உள்ளது எனற அடிப்படையில் பெற்றோரில் தந்தை தொழிலுக்காகச் சென்றால் தாய் பிள்ளையை கவனமாக பார்த்துக் கொள்வதுடன் அவர்களது பணிகளைச் சிறப்புற செய்ய வேண்டும். அவ்வாறே பிள்ளைகளுக்கு நல்ல ஒழுக்கங்களையும் நற் பண்புகளையும் சொல்லிக் கொடுக்க வேண்டும். இதனால் நல்ல ஒழுக்கம் அவரகளுடைய ஆளுமைக்கு அடித்தளமாக அமையும்.
- பெற்றோர் தமது தொழிலுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை தமது பிள்ளைகளின் வளர்ப்பிலும் காட்ட வேண்டும். தாய் வேலைக்குச் செல்லும் போது அல்லது இருவரும் வெளிநாடு செல்வதை நன்றாக யோசித்து செய்வதுடன் பிள்ளையின் பாதுகாவலர்கள் தொடர்பில் நம்பிக்கை இருப்பின் மாத்திரம் ஒப்படைத்து விட்டுச் செல்லல் வெண்டும்.
- தந்தை வெளிநாட்டிலிருப்பினும் இன்றைய நவீன வசதிகளுக்கேற்ப ஒவ்வொரு நாளும் பிள்ளைகளுடன் உறவாட வேண்டும். மேலும் அதன் போது பிள்ளைகளின்

கருத்துக்களை கூற சுதந்திரம் வழங்குவதோடு அவற்றை செவிமடுக்க வேண்டும். இதனால் பிள்ளைகள் பெற்றோர் தொடர்பில் பாதுகாப்பாக உணர்வார்கள்.

- பிள்ளையின் எண்ணங்களையும், தேவைகளையும் சரியாகப் புரிந்து கொண்டு அவற்றை நிறைவேற்றுதல் அவசியமாகும். கணவன் மனைவியிடத்திலும், பெற்றோர் பிள்ளைகளிடத்தும் சிறந்த முறையில் உறவாடுவதுடன் அவர்களுடைய பொருளாதார மற்றும் உடலியல் தேவைகளை அறிந்து செயற்பட வேண்டும். இன்று அதிகமான பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்கு தடையாக இருப்பது பெற்றோர் பிள்ளைகளிடம் தவறான வார்த்தைகளை பிரயோகிப்பதனாலாகும். எனவே பெற்றோர் பிள்ளைகளின் முன் தேவையற்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவதை தவிர்ப்பதோடு கனிவான இன்சொற்களையே பயன்படுத்த வேண்டும்.
- உனக்கு ஒன்றும் தெரியாது, நீ சின்ன பிள்ளை போன்ற வார்த்தைகளைப் பிரயோகிக்கக் கூடாது. அவ்வாறே வீட்டில் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு முன் உரத்துச் சத்தமிட்டு சண்டை போடக் கூடாது என்பதோடு மனைவியை தாக்கவோ பிள்ளைகளை கண்டிக்கவோ கூடாது. ஏனெனில் பிள்ளைகள் அச்சம் கொள்வதோடு அவர்களும் பெற்றோரைப் போலவே செயற்படுவர். அது மட்டுமன்றி அவர்கள் பெற்றோரில் வெறுப்புணர்வை வெளிக்காட்டவும் இது காரணமாகலாம். இது அவர்களுடைய ஆளுமை விருத்தியை பாதிப்பதாக அமையும்.
- எனவே பிள்ளைகளுக்கு அவர்களுடைய செயற்பாடுகளைச் செய்ய ஊக்குவிப்பதோடு பாராட்டுக்களை வழங்குவதால் சரியான தீர்மானங்களை எடுக்கவும் சவால்களை எதிர்கொள்ளும் தைரியத்தையும் அவர்கள் பெறுவார்கள். இது அவர்களுடைய ஆளுமையை அதிகரிப்பதாக அமையும்.

**முடிவுரை**

எனது ஆய்வின் முடிவின் படி ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு அதிகமாக செல்வாக்குச் செலுத்துகின்றதைக் கண்டறிய முடிந்தது. அதனடிப்படையில் பிள்ளைகளின் ஆளுமைமையை பாதிக்கும் காரணிகளில் முக்கியமானதாக பெற்றோர் தமது பிள்ளைகளுடன் போதிய நேரம் செலவிடாமை மற்றும் அதிக அன்பு காட்டுதல் பிள்ளைகளிடம் தேவையற்ற வார்த்தைகளைப் பிரரோகிப்பது அவர்களுடைய ஆளுமை விருத்தியை பாதிக்கும் முக்கிய காரணிகளாக கண்டறியப்பட்டன.

எனவே பெற்றோர் தமது பிள்ளைகள் வளர்ப்பிலும் அவர்களுடனான தொடர்புகளையும் அதிகரித்துக் கொள்வதும் அவசியமாகும். அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்தல், தேவைகளை நிறைவு செய்தல் மற்றும் சரியான வழிகாட்டல்களை வழங்குவதிலும் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் பிள்ளைகள் பல்வேறுபட்ட உள ரீதியான பாதிப்புக்களுக்கு உட்படுவதோடு கற்றலில் ஆர்வமின்மை, வகுப்பறையில் சிக்கலான நடத்தை மாற்றங்களை வெளிப்படுத்தல், கவலையடைதல், தனித்திருத்தல், சோர்வாக இருத்தல், சண்டையிடல் போன்றவற்றை வெளிப்படுத்துவர். இது காலப்போக்கில் அவர்களுடைய ஆளுமையை பாதிப்பதோடு எதிர்கால வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமையும். எனவே சிறந்த ஆளுமையை விருத்தி செய்வதிலும், சிறந்த

கற்றலை உருவாக்குவதிலும், எதிர்காலத்தில் சமூகத்திற்குத் தேவையான நற்பிரஜைகளை வழங்குவதற்கும் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்வதில் பெற்றோரின் பங்களிப்பு மிகவும் அவசியமானாகும்.

**உசாத்துணைகள்**


Albert, R.S. (1994). The contribution of early family history to the achievement of eminence. Talent development. In N. Colangelo, S.G.Assouline, & D.L. Ambroson (Eds), *Proceedings from the 1993 Hentry B. and Jocelyn Wallace National Research Symposium on Talent Development* (pp.311-360). Dayton, OH: Ohio Psychology Press

Claudia Rodrigues Sequeira de Figueiredo, Filomena Valadao Dias, (2012) Families Influences in Children's Development and Behaviour, From Parents and Teachers' Point of View *Psychology Research*, ISSN 2159-5542 Vol. 2, No. 12, 693-705

Eva, M., Pomerantz Rose A., Thompson Parents' Role in Childrren's Personality Development: *The Psychological Resource Principle University of California*, Davis

Eleanor, E. Maccoby Parenting and Its Effects on Children: On Reading and Misreading Behavior Genetics, *Department of Psychology, Stanford University*, Building 420, Jordan Hall, Stanford, California 94305–2130

Gershoff, E. T. (2002). Corporal Punishment by Parents and Associated Child Behaviors and Experiences: Ameta-Analytic and Theoretical Review. *Psychological Bulletin*, *128*(4), 539–579. Retrieved from: https://Doi.Org/10.1037/0033-2909.128.4.539

Jerome Kagan, (2021). The Role of Parents in Children's Psychological by guest. Retrieved from: www.aappublications.org/new

Nabil El-Hilali, A., Layla Al-Rashidib, The Impact of Parental Involvement, Personality Traits and Organizational Support on Satisfaction, *Global Conference on Contemporary Issues in Education*, GLOBE-EDU 2014, 12-14 July 2014, Las Vegas, USA

Paula Olszewski-Kubilius, The Role of the Family in Talent Development, *Northwestern University Center for Talent Development.*